**DEPOSITION OF WITNESS**
**CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE**
**IN THE COURT OF ADDITIONAL SUB COURT, DINDIGUL**
**O.S. No.134/2023**

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | முனுசாமி | Father's Name | தனுஷ்கோடி |
| Village | செட்டியபட்டி | Taluk | திண்டுக்கல் கிழக்கு |
| Caste | | Calling | கூலிவேலை |
| Religion | | Age | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2026

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> –**

1. நானும், எனது சகோதரர் வெங்கடாசலபதியும், வாதியும் தனுஷ்கோடியின் மக்கள் என்றால் சரிதான். தனுஷ்கோடியின் சகோதரி பெயர் குருந்தாயம்மாள் என்றால் இல்லை. குருந்தாயம்மாள் என்பவர் எனது பாட்டி. சின்னத்தாயம்மாளும், குருந்தாயம்மாளும் உடன்பிறந்தவர்கள். சின்னத்தாயம்மாள் எனது அப்பாவை பெற்ற தாயார். 1383 பசலியில் உள்ள சிட்டாவில் எனது தந்தை தனுஷ்கோடி பெயரிலும், குருந்தாயம்மாள் பெயரிலும் இடம் பெற்றுள்ளது என்றால் ஆமாம். குருந்தாயம்மாள் தற்பொழுது இருக்கிறாரா இறந்துவிட்டாரா என்றால் இறந்துவிட்டார். குருந்தாயம்மாளின் வாரிசு யார் யார் என்றால் கிருஷ்ணம்மாள் மட்டும் தான் எனக்குத் தெரியும். அவர் குருந்தாயம்மாளின் மகள் ஆவார். எனது சகோதரர் தான் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால் பாகம் கேட்டு போட்டுள்ளார்.

2. 3ல் 1 பங்கு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். வாதியின் சொத்து விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் எழுதப்படிக்கத் தெரியாததால் தெரியவில்லை. எனது வாக்குமூலத்தில் சர்வே எண், விஸ்தீரணம் சொல்லியது நான் சொல்லவில்லையா என்றால் எனது தம்பி சொன்னார். சர்வே எண்.265/6ல் 2 ஏக்கர் 96 செண்டில் 3ல் 1 பாகம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். நான் எனக்குத் தெரிந்த வகையில் கொடிவழி ஜாபிதா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் எதிர்கோருரிமை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், தனியாக நாங்கள் வழக்கு தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஆதரவான ஆவணங்கள் எதுவும் நான் எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பில் 13 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 ஆவணங்களும் பொதுச் சொத்து தான் என்பதைக் காட்டக் கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. ஏற்கனவே வாதி தாக்கல் செய்த பாகவழக்கு தாக்கல் செய்து தள்ளுபடியான ஆவணங்களை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடியானதற்கு காரணம் சம்பந்தமில்லாத நபர்களை தரப்பினர்களாக சேர்த்த காரணத்தினால் தான் வழக்கை வாதி திரும்பப் பெற்றுக் கொண்டார் என்றால் சரியல்ல. எனது வாக்குமூலத்தில் சி.பி.சி பிரிவு 10ன்படி வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்று சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. வாதி தனக்குப் பாத்தியப்பட்ட 3ல் 1 பாகத்தை பொறுத்து தான் தான செட்டில்மெண்டாக தனது மகனுக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எங்களுக்கு ஒப்படைப்பு செய்யாமல் எழுதிக் கொடுத்துள்ளார்.

4. வாதியின் மகன் வாதியின் வழக்கை ஒப்புக் கொண்டுள்ளதால் அவரை தனியாக தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. எனது வாக்குமூலத்தில் 5வது பாராவில் 5 பேரிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்லியிருப்பதைப் பொறுத்து யார் கிரையம் வாங்கினார் என்றால் நான் தான் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கிய சொத்தைப் பொறுத்து மூலப்பத்திரமே இல்லையென்றும், பாத்தியமில்லாத நபரிடமிருந்து நான் பெற்ற கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற பத்திரத்தை கோர்ட்டில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக நான் வரிவகையறா செலுத்தியதாகச் சொல்லியிருப்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தான 2 ஏக்கர் 95 செண்டைத் தவிர தோரயப்பட்டாவின் பெயரிலான வீடுகளை எல்லாம் நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த வீடுகள் சம்பந்தப்பட்ட தோராயப்பட்டாவில் கண்ட சொத்தை பொறுத்து ஏற்கனவே பிரித்துக் கொண்டோம் என்றால் ஏற்கனவே எல்லாச் சொத்துக்களையும் பிரித்து அவரவர் சொத்தை அவரவர் அனுபவித்து வருகிறோம். அதன்படி அவரவர் பெயரிலான வீடுகளை அனுபவித்து அதற்கு வீட்டு வரிகள் செலுத்தி வருகிறோம் என்றால் சரிதான்.

5. வழக்குச் சொத்துக்களில் எங்கள் மூன்று பேருக்கும் தவிர வேறு யாருக்கும் பாத்தியம் இல்லையென்றும், எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முத்துலெட்சுமியையும், இராமகிருஷ்ணன், பெத்துசாமி, பாலகுருசாமி, அம்சவள்ளி ஆகியோர்களை வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. எனது வாக்குமூலத்தில் மேற்படியார்களுக்கு பாத்தியம் என்று சொல்லியிருப்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. முத்துலெட்சுமி எங்கள் உடன்பிறந்த சகோதரி ஆவார். அவர் இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் தான் எனது மாமா இராமகிருஷ்ணன், மற்றும் மக்கள்கள் தான் பெத்துச்சாமி, பாலகுருசாமி, அம்சவள்ளி ஆகியோர்கள் ஆவார்கள். மேற்படி நபர்கள் எங்கள் மீது வழக்கு போட்டுள்ளார்களா என்றால் இல்லை. நான் சொல்வது பொய் என்றும், முத்துலெட்சுமி இறந்துவிட்டதால் வழக்கிலிருந்து வெளியேறிவிட்டார் என்றும், எனவே அவர்களுக்கு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் எங்கள் மூன்று பேருக்கு மட்டும் தான் பாத்தியம் என்றால் சரியல்ல. பிராது படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை.

Taken down by me/before me in open court on 06.08.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

KANNAN A

ADDITIONAL SUB JUDGE
Digitally signed by KANNAN A
Location: DINDIGUL
Date: 2026.08.07 10:03:26 +0530

Additional Sub Judge,
Dindigul.